முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் நன்றாக இருக்கிறார். இன்றைக்கு discharge ஆகிவிடுவார். நாளைக்கு வந்து, இந்த அவையை நடத்துவார்.

திரு. துரைமுருகன்: மிக்க நன்றி. மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் இன்று காலை மருத்துவமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தேன். காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நன்கு ஆரோக்கியமாக இருக்கிறார்கள். நாளைக்கு வந்து சபையை நடத்துவார்கள்.

திரு. துரைமுருகன்: மிகவும் நல்ல செய்தி, மகிழ்ச்சிக்குரியது.

(ஆ) திரைப்படங்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கக்கோரி திரையரங்குகள் மூடப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவதாக ஒரு தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன். GST வந்தால் சர்வரோக நிவாரணியாக இருக்கும் என்று சொன்னார்கள். இருக்கட்டும் பரவாயில்லை, வறியோர்களைப் பொறுத்தவரையில். ஆனால், தியேட்டர்காரர்களைப் பொறுத்தவரையில் அது சர்வரோகமாகத்தான் இருக்கிறது. காரணம், GST வந்தும் பல பிரச்சினைகள் தீரவில்லையென்றும், கேளிக்கை வரி கூடவேயிருக்கிறது என்ற காரணத்தாலும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் இதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.

திரு. துரைமுருகன்: இல்லையில்லை. ஆயிரம் தியேட்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.

2017 ஜூலை 4]

திரு. துரைமுருகன்: இல்லையில்லை. அதுவல்ல இது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது ஆய்வில் இருக்கிறது. பின்னர் அதற்கு விளக்கம் கொடுக்கப்படும்.

திரு. துரைமுருகன்: தியேட்டர்காரர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும் நேற்று சந்தித்திருக்கிறார்கள். அவ்வாறு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபிறகும் தியேட்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன என்றால் என்ன பிரச்சினை? பிரச்சினைக்கு சுமுகமான முடிவு ஏற்படவில்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அப்பொருள் ஆய்வில் இருக்கிறது. பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுமுகமான முடிவு எட்டப்படும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதுகுறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுமுகமான முடிவு ஏற்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கிறது. பின்னர் அதற்கு விளக்கம் கிடைக்கும். (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கும்போது அதைப்பற்றி என்ன சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) முட்டுக்கட்டை ஏதுமில்லை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்வார்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாட்டு மக்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் முன்னின்று உடனடியாக அவற்றைத் தீர்க்கக்கூடிய அரசு. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, GST–யினால் இன்றைக்கு தமிழகத்திலே தியேட்டர்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. அதற்கு, நமது அரசு என்ன. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், என்ன என்று கேட்டு முடியுங்கள். (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள்.

திரு. கரி. இராமசாமி: *அதற்கு நமது அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது? இன்றைக்கு வரிகள் அதிகமானதால், உணவு விடுதிகளிலே உணவு உண்ண முடியாத நிலை இருக்கிறது. இந்த வரிகளைக் குறைப்பதற்கு தயவுசெய்து இந்த அரசு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். உங்களால் இப்பொழுது முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். அதைச் செய்வீர்கள் என்றும் நம்புகிறோம். அதைச் செய்து தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி துணைத் தலைவர் பேசிவிட்டார்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தப் பிரச்சினை நாட்டு மக்களுக்கு வந்தாலும், அதைக் கனிவான முறையிலே பரிசீலனை செய்யும். அதேபோல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கவனமாக கனிவுடன் பரிசீலனை செய்துள்ளார்கள். Tax–ஐப் பொறுத்தவரையில் காலங்காலமாக இருந்துவந்த tax தான். இதுபற்றிப் பேசுவதற்கு நேற்றையதினம் திரைத் துறையினர் இரண்டு குழுக்களாக வந்து, அவர்களுக்கு இருக்கிற பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திரைப்படத் துறைக்கு என்னென்ன உதவிகளைச் செய்தார்கள் என்பதெல்லாம் எடுத்துரைக்கப்பட்டன. அதிகமான பணிச் சுமை இருந்தாலும்கூட, இரண்டு குழுக்களாக வந்தவர்களிடம் மதியம் ஆரம்பித்து இரவு 8.00 மணி வரையிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதிக நேரம் ஒதுக்கி அவர்களிடம் பேசினார்கள். அதேபோல, நானும், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் ஆகியோரும் அதிகாரிகளும் அவர்களிடம் பேசினோம். பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கண்டிப்பாக, நல்ல முறையில், அவர்கள் எதிர்பார்க்கிறமாதிரி, பேச்சுவார்த்தை அமையும் என்று நம்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுமுகமான முறையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை முடிந்தபிறகு, அதுபற்றி விரிவாகத் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (குறுக்கீடு)